திருப்பெருந்துறை-

சிவயோக நாயகி அந்தாதி



ந. செ. இராமசாமி எம். ஏ,

ஸ்ரீ ராஜராஜேஸ்வரி துணை

திருப்பெருந்துறை-

சிவயோக நாயகி அந்தாதி

கு. செ. இராமசாமி எம். ஏ.,

அருட்கவி கு. செ. இராமசாமி, எம்.ஏ.,
15, சிவன் கோவில் தெற்குத் தெரு,
சிவகங்கை - 623 560.

வெளியீடு:

தனலட்சுமி இராமசாமி,
3, நாகு ஆசாரி காலனி,
சுத்தானந்த பாரதி தெரு,
சிவகங்கை.

முதற்பதிப்பு: ஜனவரி, 1975.

விலை ரூ. 1-50

அச்சிட்டோர்:
முத்தமிழ் அச்சகம், சிவகங்கை-75.

திருவடியில்
சூட்டுகின்றேன் . . .

உயிரென்ற யாழிலே உந்தியும் ஊன்றியும்
உன்புகழ் மீட்டுகின்றேன்!
உள்ளமெனும் திரையிலே உணர்வென்னும் கோலினல்
உன்வடிவை தீட்டுகின்றேன்!
செயிரற்ற அன்பையே தீபமாய், தூபமாய்த்
திருமுன்பு காட்டுகின்றேன்!
சிதருத பார்வையோடு செய்ததமிழ் மாலையைத்
திருவடியில் சூட்டுகின்றேன்!
குயிலாக மாறிநான் கோயில்கள் தோறும் உனைக்
கூவிவர அருளுவாயா?
குளிர்தென்றலாகி நின் புகழ்பாடி உலகெங்கும்
கூத்தாட உதவுவாயா?
எயிலார் பெருந்துறைச் சிவயோக வல்லியே!
ஈசனுர் மகிழும் மலரே!
இறைவினை ஆண்டருளும் இராஜராஜேஸ்வரி,
இமயமலை வாழும் உமையே!

— உன்னைச்சரணடைந்தேன்

உ

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி

ஜகத்குரு ஸ்ரீ சங்கராசார்ய ஸ்வாமிகள் அருளிய

ஸ்ரீ முகம்

முகாம்: உபமாகாகிராமம் (ஆந்திரப்ரதேசம்) தேதி: 12—1—1975

சிவகங்கை மன்னர் கல்லூரி விரிவுரையாளரும், 'உன்னைச் சரணடைந்தேன்' முதலிய பக்திநூல்களின் ஆசிரியருமான **ஸ்ரீ கு. செ. இராமசாமி** எழுதியுள்ள **சிவயோக நாயகி அந்தாதி** என்னும் நூல் திருப்பெருந்துறை க்ஷேத்ரத்தில் உத்தம பக்தரான மாணிக்கவாசகருக்கு குருரூபத்துடன் உபதேசம் செய்தருளிய ஆத்மநாதஸ்வாமியின் தேவியான **ஸ்ரீ சிவயோக நாயகி** அம்மனை அந்தாதி முறையில் செந்தமிழ் நடையில் வர்ணிக்கிறது.

இந்நூலில் எல்லா வேதங்களாலும் புகழப்படும் மேன்மை, தொழுவார் துயர் துடைக்கும் கருணை, கோள்களால் ஏற்படும் இன்னல்களைப் போக்கும் வல்லமை, பல்வேறு ஸ்தலங்களில் அந்தந்த தேவிகளாக விளங்கும் மாட்சி, இப்போது உலகில் நிலவும் சீர்கேடுகளை அழிக்கும் சக்தி முதலிய அம்பாளின் மஹிமைகள் உருக்கம், பொருட்செறிவுகளுடன் கூடிய தமிழ்நடையில் விளக்கப்பட்டிருக்கின்றன.

பக்தர்கள் இந்நூலின் மூலம் ஸ்ரீ சிவயோக நாயகி அம்மனைத் துதித்துக்கொண்டு, இவ்வம்மனின் அருளால்எல்லாமங்களங்களையும் அடைவார்களாக.

இவ்வாசிரியரும் மேன்மேலும் இத்தகைய தெய்விகநூல்களை இயற்றிக்கொண்டு அம்மனின் அனுக்ரஹத்தினால் இம்மை, மறுமைப் பயன்களை அடைவாராக.

நாராயணஸ்ம்ருதி:

முருகா

திருமுருக கிருபானந்த வாரியார் வழங்கிய

அணிந்துரை

வளைந்து வளைந்து செல்லும் நதிகள் யாவும் முடிவில் கடலைச் சேர்ந்து ஒன்றுபடுகின்றன. நதிகள் புணர்வதனால் கடல் புணரி எனப் பேர்பெற்றது. இது போல் ஆன்மாக்கள் இறைவனையடைந்து ஒன்றுபட வேண்டும் இதனை ஞானநூல் **சிவாத்வைதம்** என்று கூறுகின்றது.

தங்கத்தில் வைத்தமணி தனித்து இருக்கும். தங்கம் உருகினால் மணி அதில் ஒன்றுபடுகின்றது. அதுபோல் நம் உயிர் உருகினால் அதில் சிவம் ஒனறுபட்டுவிடும் முதலில் உள்ளம் உருகவேண்டும். பின்னர் உயிர் உருக வேண்டும். உருகிய உயிரில் சிவம்கலந்து ஒன்றுபட்டுவிடும். இதுதான் சிவபோகம் எனப்படும்.

இந்த முறையில் நம் உள்ளத்தை உருக்குவன செந்தமிழ்ப்பாடல்கள். உயர்ந்த அமுதம் போன்ற பாடலால் நம் நெஞ்சககனகல் நெகிழ்ந்து உருகும்.

உருகும் செயல்தந்து உணர்வென் றருள்வாய்?

உருகும் அடியவர் இருவினை யிருள்பொரும்
உதய தினகர

என்று அருணகிரிநாதர் உபதேசிக்கின்றார். நமது உள்ளத்தை உருக்கி இன்பத்தைப்பெருக்கவேண்டும்.

அன்பர்கள் இறையருளால் உள்ளம் உருகிப் பாடல்கள் பாடுவார்கள். இந்த வகையில் சிவகங்கை என் அன்பர், சிறந்த செந்தமிழ்ப்புலவர் திரு. கு செ

இராமசாமி எம்.ஏ. அவர்கள் உயர்ந்த செம்மொழி களால் பாடல்கள் இயற்றியுள்ளார்.

இப்போது திருப்பெருந்துறை, **சிவயோகநாயகி அந்தாதி** என்ற ஓர் அரிய துதிநூலைத் தமிழுலகுக்குத் தந்துள்ளார்.

பாடல்கள் உள்ளத்தைத் தொட்டுப் பரவசப் படுத்துகின்றன. கனியமுதம் போல் இனிமையாகத் திகழ்கின்றன.

இந்தப் பாடல்களில் மொழிகள் துள்ளித்துள்ளித் தாண்டவம் புரிகின்றன. 34ஆம் பாடல், 41ஆம் பாடல்களைப் படிக்கின்றபோது கண்துளிக்கின்றது. நமது உள்ளத்தை உருக்கி இன்பத்தைப் பெருக்கு கின்ற இப்பாடல்கள் நம்மை பக்தி வெள்ளத்தில் முழுகவைக்கின்றன.

இதனை ஓதுவார் தீது தீர்வர். அன்பர் இராம சாமியவர்களின் தமிழ்த்தொண்டு பாராட்டுதற்கு உரியது. இவர் இயற்கைக் கவிஞர்.

நேரிசை வெண்பா

நங்கை சிவயோக நாயகியின் அந்நாதி
தூங்கத் துதிநூல் துயர்க்கடலின்—வங்கமாம்
மேவும் இராமசா மிப்புலவன் மேன்மையுடன்
பூவுலகில் வாழிபுகழ் பூண்டு.

வேலூர் — அன்பன்,
7—1—75 — கிருபானந்தவாரி.

கட்டளைக்கல்

அருட்சுவை அந்தாதி

அன்புப் பாவல! அழகிய நாவல!
திருப்பெருந் துறையிலே பிறப்பத னாலோ
மட்டுவார் குழலி கட்டளை யாலோ
கட்டளைக் கலித்துறை கல்லும் கரையும்
மணிவா சகத்தேன் மணங்கமழ் வதுவே!
அருட்பெரும் வாசகர் ஐந்தெழுத் தமுதா
உள்ளச் சிவனை உருகப் பாடினர்.
சக்தியைப் பாடவே இத்தினம் எழுந்தனை!
தவயோ கக்கனல் சிவயோக நாயகி
உவக்கப் பாடிய உனதந் தாதி
உலகுள மட்டும் உள்ளந் தோறும்
ஒலிட் டிசைக்கும்; தீம்பழச் சுவையெனப்
பாவலர் பாட ஆவல ராவார்.
இன்னிசைப் புலவோய், இராம சாமிநீ
சுரந்த தமிழினைச் சுவைத்துச் சுவைத்து,
பாரத சக்தியைப் பாடிய சுத்தா
னந்தன் மகிழ்ந்தேன் சிந்தை குளிரவே!
வாழ்கநீ நீடு! வையகம் வாழ்த்த
வளம்பெற நின்புகழ் வளர்க வளர்கவே!

சிவயோகாம்பிகை துதி

அருளான வேரூன்றி அன்பான
கிளைபரவி ஆன்ம நேயப்
பொருளான தளிர்வைத்துப் பொன்னான
மலர்பூத்துப் புதிய வாழ்வாம்
தெருளான கனிமல்கிச் சிவபோக
மணம்பரவிச் செழிக்க வாழ்வு
குருவான சிவயோக நாயகியை
எந்நாளும் கும்பிட் டுய்வோம்!

—கவியோகி மகரிஷி சுத்தானந்த பாரதி

தாயும் சேயும்

திருப்பெருந்துறை **ஸ்ரீ மணிவாசகப் பெருந்தகை**யாரால் பாடப்பெற்ற தலம். இவ்வூரில் அம்பிகை சிவசக்தி ஐக்ய வடிவில் **சிவயோக நாயகி** எனும் பெயருடன் கோயில் கொண்டுள்ளாள். 'ஸ்ரீமாதா'என்று தொடங்கும் லலிதா ஸஹஸ்ர நாமம் 'சிவசக்தி ஐக்ய ரூபிணி லலிதாம்பிகா' என்று முடிகிறது. அப்படி சிவசக்தி ஐக்ய ரூபிணியான தேவி இங்கு அருவுருவாக ஸ்ரீசக்ர பீடத்தின் முன் இரண்டு திருவடிகளை மட்டும் தீபாராதனையின்போது தரிசிப்பவர்களுக்குக் காட்டி அருள்புரிகின்ருள்.

தெய்வத்தை வழிபடுபவர் குழந்தை உள்ளம் படைத்தவராகின்றனர். குழந்தை உள்ளம் படைத்தவர் தெய்வத்தைத் தாயாகவே காண்கின்றனர். அப்படிப்பட்டவர் இந்நூலின் ஆசிரியர் **வித்வான் கு. செ. இராமசாமி.** கட்டளைக் கலித்துறை யாப்பில் சிவயோக நாயகியை அவர் 'காதலாகிக் கசிந்து' பாடுகிருர். அதைப் படிப்பவர் உள்ளத்தில் தேவியிடம் பக்தி ஊற்றெடுத்துப் பெருகும். 'நான்பெற்ற இன்பம் பெறுக இவ் வையகம்' என்பதே ஆசிரியரின் உள்ளக்கிடக்கை. அவ்வாசையை சிவயோக நாயகி பூர்த்தி செய்தருள்வாள் என்பதில் ஐயமில்லை.

—உரையாசிரியர் 'அண்ணு' சுப்ரமணியன்

அவைகள் போற்ற...
அறிஞர் பாராட்ட...

மாணிக்க வாசகருக் கருள்கிடைத்த
பெருந்துறையில் வாழும் அன்னை
ஆணிப்பொன் எனஇருப்பாள்; அருவமென
இலங்கிடுவாள்; அகிலம் தந்தாள்;
பேணிப்பன் மறைபுகழும் சிவயோக
நாயகியின் பெருமை எல்லாம்
ஏண்நிற்ப அமைத்தினிய அந்தாதி
நூலொன்றை இயற்றித் தந்தான்.

சிவகங்கைப் பதியினிலே மன்னர்கல்லூ
ரியில்ஆசான்; செந்த மிழ்நாற்
சுவை அறிந்தான்; சுவைக்கவிகள் பலபாடும்
கவிவலவன்; கொள்கை ஓங்கி
நவையிலன்பு நெறியொழுகும் இராமசா
மிப்பெயரோன்; நவின்ற இந்நூல்
அவைபலவும் போற்றப்பே ரறிஞரெலாம்
பாராட்ட அலர்க யாண்டும்!

தெள்ளியவெண் பளிங்கென்னும் நடையினிலே
பிசிறில்லாத் திறத்தில் பக்தி
துள்ளிவர ஆற்றொழுக்காய்ப் பொருளமைய
இழுக்கில்லாச் சொற்க ளாலே
கள்ளிருக்கும் மலர்க்கூந்தற் சிவயோக
நாயகியின் கழற்கந் தாதி
வெள்ள அன்பிற் பாடிய இக் கவிஞன்நலம்
மிகப்பெற்று விளங்கி வாழ்க!

—வாகீச கலாநிதி கி. வா. ஜகந்நாதன்.

தேமதுரக் கவி

சிவயோக நாயகியின் அருளைக் கண்ணால்
சிறுபிள்ளை முதலாகக் கண்ட நம்பி;
தவயோகம் தந்தைக்குப் பலித்த தாலே
தமிழ்பாடும் மகனாகத் தரையில் வந்தோன்;
சிவனோடு நாயகியாள் எதிரே வந்தால்
செந்தமிழைப் பாடவரம் கேட்கும் செல்வன்;
சிவனருளால் கு. செ. இரா. சிறந்து வாழச்
சிங்கார வடிவேலன் வாழ்த்து கின்றேன்!

ஆவுடையார் கோயிலிலே பிறந்த தும்பி;
அழகப்பர் கோயிலிலே பயின்ற கிள்ளை;
கோவுடையார் துரைசிங்கர் கோட்டை மீதில்
கொடியான தமிழ்த்துறையின் குயிலாய் வாழ்வோன்;
தேவிசிவ நாயகியின் தெய்வக் காலைத்
திலகமென நெற்றியிலே தினமும் கொள்வோன்;
பூவுடைய நெஞ்சாலே வாழ்த்து கின்றேன்—
புகழுடைய கவியாகப் பொலிந்து வாழ்க!

தாமரையைத் தாளாக மாற்றி னாே?
சந்தனத்தை மையாக ஊற்றி னாே?
நாமகளைத் தனியாகச் சந்தித் தானோ?
'நான்' அற்றுத் திருவருளைச் சிந்தித் தானோ?
தேமதுரக் கவிபாட இராம சாமி
செய்ததனை மறைக்காமற் செப்பு வானோ?
கோமகனாய்க் கொடிகட்டிக் கவிதை நாட்டில்
கொலுவிருக்க வாழ்த்துகிறேன்—குயிலே வாழ்க!

—பேராசிரியர் அர. சிங்காரவடிவேலன் எம். ஏ., பி. டி.,

தெவிட்டாத தெள்ளமுதம்

பூவடர்ந்த நெடுஞ்சோலை; புகையடர்ந்த
கரும்பாலை; புலமைச் சாலை;
ஆவடர்ந்த சாவடிகள்; அழகடர்ந்த
மாளிகைகள்; அடர்ந்தே ஓங்கும்
மாவடர்ந்த பெருந்துறைவாழ் சிவயோக
நாயகிபொன் மலர்த்தாள் கட்கே
பாவடர்ந்த செழுந்தமிழால் பயனடர்ந்த
பாமாலை படைத்துத் தந்தான்!

எண்ணஎண்ண உளமினிக்க, இயம்புதொறும்
புகழ்தழைக்க, இலக்க ணச்சீர்
வண்ணவண்ண மாய்அமைய, வரிக்குவரி
தேன்நிறைய, மாண்பார் ஆன்றோர்
உண்ணஉண்ணத் தெவிட்டாத தெள்ளமுதம்
ஈதென்றே ஓதி, ஆசி
பண்ணவரும் கலித்துறைப்பா தொண்ணூற்றே
டொருபத்துப் பகர்ந்தான் மாதோ!

சூட்டிகுன் பாட்டுடையோர் துதிக்கின்ற
பெருந்துறைவாழ் தோன்றல்; மிக்க
நாட்டமொடு சோதிடநூல் நவில்கின்ற
செல்லையா நல்கும் மைந்தன்;
தேட்டிலகு செழுந்தமிழைத் தெய்வமெனும்
சிவகங்கைச் சீமை மன்னர்
நாட்டியகல் லூரியிலே நயத்தோடு
தமிழ்ப்பாடம் நடத்தும் ஆசான்!

புனிதமுளோன்; பொறுமையுளோன்; புதுமைதிகழ்
புலமையுளோன்; புகலும் பேச்சில்
இனிமையுளோன்; எளிமையுளோன்; இசையோடு
தமிழ்பாடும் இராம சாமி
எனுமரிய பெயருடையோன்; இதமுடையோன்
அவன்கிளையோ டென்றும் வெள்ளிப்
பனிமலையின் விளக்கேபோல் பண்பாடி
அன்போடு பண்பாய் வாழ்க!

—கவிமணி கரு. கண்ணுச்சாமி

பேரின்பக்கடல்

தாங்கள் எழுதிய இவ்விழுமிய அந்தாதிநூலைப் பார்த்தேன், படித்தேன், மகிழ்ந்தேன் என்பதெல்லாம் போதாது. ஆழ்ந்து பேரின்பக் கடலுள் மூழ்கினேன் என்பது பொருந்தும்.

பாட்டாலும், பொருளாலும், உணர்ச்சியூட்டும் திறத்தாலும் பெருமைமிக்க இந்த நூல் தமிழ்மணம் நுகர்வோர்க்கெல்லாம் பெருமகிழ்வு அளிக்கும் என்பது என் உறுதி.

—பேராசிரியர் தி. இராமாநுசனுர்.

முன்னுரை

தமிழ்மொழி உலக இலக்கிய பீடத்தில் தனிச்சிறப்பினைப் பெறக் காரணமாயிருந்த நூல் திருவாசகம். திருவாசகம் என்னும் ஞானப்புதையலை நாம் பெறக் காரணமாயிருந்த ஊர் **திருப்பெருந்துறை.**

பேச்சுவழக்கில் ஆவுடையார்கோவில் என அழைக்கப் பெறும் இந்த ஊர் இன்றைய புதுக்கோட்டை மாவட்டத்தில் அறந்தாங்கியிலிருந்து ஒன்பதுகல் தெற்காக அமைந்துள்ளது. கண்ணையும் கருத்தையும் கவரும் சித்திரகூடமாக, சிற்பசாலையாக விளங்கும் திருப்பெருந்துறைக் கோயிலைக் கட்டியவர் **மாணிக்கவாசகர்.**

அமைச்சராக மதுரைப் பாண்டியனிடம் பணியாற்றிவந்த வாதவூர்ப்பெருமானை அரசராக, ஆன்மீக உலகின் சக்கரவர்த்தியாக மாற்றமடையச் செய்த அற்புத ரசவாதம் இங்கேதான் நிகழ்ந்தது!

திருவாசகத்தின் பாட்டுடைத் தலைவரான திருப்பெருந்துறையுறை சிவபெருமானின் திருநாமம்: **ஸ்ரீ ஆத்மநாதர்.** தேவியின் திருநாமம் **ஸ்ரீயோககாம்பாள்** சுவாமி அருவசிவமாகவும், அம்பாள் அருவசக்தியாகவும் இங்கே திருக்கோயில் கொண்டு அருள்பாலித்து வருகிறார்கள்.

உலகில் உள்ள சக்திபீடங்கள் ஐம்பது என்றும், இவற்றுள் நாற்பத்தொன்பது **காரியபீட**ங்களாக மட்டுமே இருக்கத் திருப்பெருந்துறை யோகபீடம் ஒன்றுதான் **காரணபீட**மாகத் திகழ்வதாக அறிவிற்சிறந்தார் கூறுவர்.

பதுமபீடமும், அதன்மேல் மேருப்பிரஸ்தாரமான ஸ்ரீவித்யா சக்ரமுமே அம்பிகை எழுந்தருளியிருப்பதற்கான அடையாளங்கள். ஒரு கண்ணாடி—அதற்கு முன்பாக இரண்டு பாதங்கள்—இவைகளையே பலகணியின் ஒருகண்வாயிலாகத் தீபாராதனை வேளையில் தரிசிக்கின்றோம்.

ஸ்ரீ யோகாம்பாளைக் கொண்டாடுவதே **சிவயோகநாயகி அந்தாதி.** அம்பிகை திருவடிகளை மட்டுமே நமக்குக் காட்டியரு ளுவதால் மிகுதியும் திருவடிப்புகழ்ச்சியாகவே அந்தாதி அமைந் துள்ளது. ''சீகாழிப்பிள்ளைக்குப் பால்சுரந்த திருமார்பினையும், ஜீவகோடிகள் அனைத்துக்கும் பரிவு சுரந்தருளும் திருநயனங் களையும் சிறிதும் நம்மால் காணமுடியவில்லையே! மறைகள் நான்கும் புகழ்ந்துபாடும் வடிவுடைய நாயகியின் திருவுரு வத்தை முழுமையாகக் கண்டு வணங்கும் பேறு யாருக்கு வாய்க் குமோ?" என்று அன்னையிடமே பிரார்த்தித்துக் கொள்கின்றது இந்த அந்தாதி (பாடல் 32).

தலவிருட்சமான **குருந்தமரம்** திருப்பெருந்துறைக் கோயி லின் மூன்றாவது சுற்றில் தழைத்தோங்கி நிற்கின்றது. குருந்தடி மண் கொடிய நோய்களையும் போக்கவல்லது. ''இழந்தவை மீட்டுக்கரும்" என்ற பாடல் (90) குருந்தடி மண்ணின் பெருமை களை வியந்து கூறுவது.

சகல தேவாலயங்களையும் திருப்பெருந்துறையிலே காண் பதோடு, சகல தேவாலயமூர்த்திகளையும் சிவயோக நாயகியிடமே தரிசிப்பது அந்தாதியின் தனிச்சிறப்பு.

o o o

பக்தி இலக்கியம் தமிழுக்குப் புதியதன்று. தெய்வப்புலவர் திருவள்ளுவர் தொடங்கி இன்றைய திரைப்படப்புலவர்கள் ஈறாகக் காலந்தோறும் கடவுளைப் பாடியிருக்கிறார்கள்.

கடவுளைப் பாடியிருக்கிறார்கள் என்று சொல்லலாமே தவிர யாரும் முற்றாக முழுமையாகப் பாடி முடித்துவிட்டதாகக் கருத முடியாது.

மனத்திற்கும் வாக்கிற்கும் எட்டாத பரம்பொருளை மனத்தால் எண்ணிப்பார்த்து வாக்கால் சொல்லிப் பார்க்கிறோம். இந்த முயற்சி மனத்தைச் செம்மைப்படுத்துகிறது; வாக்கை நன்மை யுடையதாக்குகிறது.

''இருபதாம் நூற்றாண்டிலும் இறையுணர்ச்சிப் பாடல்களா'' என்று பேசுவது ஏமாந்தபேச்சு; ஏனையோரையும்-அறிந்தோ அறியாமலோ-ஏமாற்றும் பேச்சு!

சித்தியும் முத்தியும் பக்தியின் இறுதிலட்சியங்கள். தனிமனித வாழ்வில் இவைகள் கிடைக்கும் போது கிடைக்கட்டும். ஆனால் சமுதாய அடிப்படையில், பண்பாட்டுச் சிதைவுகளிலிருந்து பாரத நாகரிகம் மீட்சிபெற, பக்தியும் தியாகமும் பழக்கத்தில் வர வேண்டும். உடனடியாக வரவேண்டும்.

சிந்தனை தெளிவடைய, செய்தொழில்கள் திருத்தமடையக் கடவுட் பாடல்கள் கட்டாயம் வேண்டும்.

"கருக்குழிக் கிடந்த காலத்தி லேயே திருக்கிளர் வாசகம் செவியுறு மாறு மணிவா சகர்தம் வண்டமிழ் முழங்கும் அணிவா சலிலே," திருப்பெருந்துறையிலே பிறந்தவன் நான். வழிவழி யாக யோகநாயகியை வழிபட்டுவரும் மரபு எனது மரபு. உண்ணும் சோறும், உடுத்தும் உடையும் அவள் உதவியவை. தங்கும் நிழலும் கழுவும் சுற்றமும் அவள் தந்தவை. பயின்றதமிழ் அவள் நன்கொடை. பாடும்கவிதை அவள் அள்ளியிட்ட பிச்சை. இவைகள் இங்ஙனமாக நான் அவளைப்பாடாமல் வேறு யாரைப்பாட முடியும்!

அகிலாண்ட நாயகியாக விளங்கும் அம்பிகைக்கு நான் அடக்கத்தோடு புரியும் ஆராதனையே இந்த அந்தாதி.

அந்தாதியைத் தொடங்கி வைத்துவிட்டுச் சிறிது காலம் அங்கும் இங்குமாக என்னை அலைக்கழித்தாள்; கண்பொத்தி விளையாடினாள்! இறுதியாக இதனை நிறைவு செய்துதந்து இன்னருள் புரிந்தாள்.

நான் பெரிதும் மதித்துப்போற்றும் பெருமக்கள் தத்தம் கட்டளைக் கல்லில் அந்தாதியை உரைத்துப் பார்த்து மதிப்பீடு செய்திருக்கிறார்கள். 'மச்சம்' மிகநன்றாய் இருப்பதாக என் அச்சம் தவிர்த்திருக்கிறார்கள். இந்த ஈரநெஞ்சங்களுக்கு என் நன்றி என்றும் உரியது.

மன்னர் நினைவுக் கல்லூரி,
சிவகங்கை.
30—12—1974

கு. செ. இராமசாமி

சிவயோக நாயகி அந்தாதி

காப்புச் செய்யுட்கள்

வெயிலுகந்த விநாயகர்

இயிலை உகந்த கடவுள்மைந்
தா!பாற் கடல்மிசையே
துயிலை உகந்த திருமால்
மருகா! சுவைத்தமிழால்
செயலை உகந்த சிவயோக
வல்லிதன் சீர்த்திசொல்ல
வெயிலை உகந்த விநாயகா,
நின் துணை வேண்டினனே!

கோபுர குமாரர்

பண்தொட்டு நின்ற இசையை,
இசையின் பயனை, அன்பை,
கண்தொட்டு நின்ற ஒளியை,
சிவயோகக் காரிகையை
எண்தொட்டு நின்ற கவிபாட
என்னுள் எழுந்தருள்வாய்—
விண்தொட்டு நின்ற பெருந்துறைக்
கோபுர வேலவனே!

வாதவூரடிகள்

ஓதவூர் நாட்டை உலகை
 உயர்விக்கும் உத்தமியின்
பாதவூர் பற்றிப் பசுந்தமிழ்
 பாடக்கண் பார்த்தருள்வாய்!
போதவூ ராய்ப்புவி போற்றும்
 பெருந்துறைப் புண்ணியனே!
வாதவூர் மாதவ னே! அருள்
 மாணிக்க வாசகனே!

வீரபத்திரர்

திக்கெட்டும் அஞ்சித் திடுக்கிடத்
 தக்கன் செருக்கழித்து
முக்கண்ணன் ஆணை முடித்தவ
 னே! வந்து முன்நிற்பவர்
துக்கங்கள் தீர்ப்பவ னே! யோக
 நாயகி தொண்டர்களின்
பக்கத்தில் நிற்பவ னே! அருள்
 வாய்வீர பத்திரனே!

சிவயோக நாயகி அந்தாதி

நூல்

திகழும் புகழ்த்திரு வாசகம்
தந்தவன் சிந்தையுள்ளும்
மகிழும் பெருந்துறை மன்னவன்
பங்கிலும் வாழ்பவளே!
இகழும் தொழில்பல யான்செய்யி
னும்நின் இணையடிக்கே
நெகிழும் மனம்திரி யேன்அடி
யேன்என்னை நேர்ந்துகொள்ளே! 1

கொள்ளும் அறம்பொருள் இன்பம் வீ
டென்னும் குறிப்புகளை
உள்ளும் பிறர்பிற தெய்வங்கள்
ஓதி உழன்றுநிற்க,
கள்ளும் சுரும்பும் கமலமும்
சூழும்நின் காமர்கழல்
விள்ளு பவர்சிவ போகத்தி
னோடவை மேவுவரே. 2

சுரும்பு-வண்டு; காமர்கழல்-விரும்பத்தக்க அழகிய திருவடிகள்;
விள்ளுதல் - புகழ்ந்து பேசுதல்.

மேவார் புரம்மூன் றும் செற்ற
பிரான்பண்டு வெள்ளிமலைப்
பூவார் புனல்தடத் தேதவம்
புக்க பொழுதினிலே-
சேவார் செழுங்கடைக் கண்ணாரும்(பு)
எய்தொரு சேயைப்பெற்றுக்
காவார் அவுணர் கருவறுத்
தாய்நின் கருணையென்னே! 3

என்னே தயை,கொடை என்னே,என்
னே உன்றன் ஈரநெஞ்சம்!
அன்னே! திருப்பெருந் தண்துறைக்
கண் தங்கும் அற்புதமே!
மின்னே! சிவயோக நாயகி
யே!வியன் மூவுலகும்
தன்னே ரிலாத தலைவியென்
றேத்தும் தனிமுதலே! 4

முதலாய், முதலுக்கு முன்னாய்,
முடிவாய், முடிவின்பின்னாய்
மதிலார் பெருந்துறை மாசக்தி
நீநின்று வையகத்தைப்
புதிதாய்ப் படைத்தும், வகுத்தும்,
அளித்தும்,பின் பொன்றுவித்தும்
கதியாய் அருள்செய்து காப்பவள்
அல்லவோ காரிகையே! 5

மேவார் - பகைவர்; சேவார் - செவ்வரியோடிய; அவுணர் - அசுரர்;
பொன்றுவித்தல் - அழித்தல்.

காரிகை கற்றுக் கவிபாடிப்
பாடிக் கறங்கையொத்துப்
பாரிடைச் சுற்றிப் பரிதவிப்
பார்பலர் பாவலர்கள்!
பேரிகை விம்மும் பெருந்துறைக்
கோயில் பிராட்டிஉன்னை
நேரிசை யால்துதிப் பார்நிலைப்
பார்என்றும் நீணிலத்தே. 6

நீளும் துயரால் நெரிக்கும்
பிணியால் நிலைகலங்கி,
கோளும் வினையும் பகையும்
வருத்திக் குலைக்கநொந்து,
நாளும் நலிந்தெங்கள் நாயகி
யே,நின் நளினமலர்த்
தாளும் தமிழும் சரணுயி
னேம் நலம் தந்தருளே! 7

தந்தங்கள் நீண்ட தமிழ்க்களி
றும்,தணி காசலனும்
வந்தன்பு சாற்றி வணங்கும்
பெருந்துறை மாணிக்கமே!
சுந்தங்கள் தங்கும் அருட்பீடம்
ஏறிக் கமழும்அர
விந்தங்கள் நின்திருப் பாதங்கள்
எங்கள் விழுத்துணையே. 8

காரிகை-யாப்பருங்கலக்காரிகை என்னும் செய்யுள் இலக்கண நூல்; கறங்கு-காற்ருடி; நளினமலர்-தாமரைமலர்; தமிழ்க்களிறு-விநாயகப் பெருமான்; கந்தங்கள்-மணப்பொருட்கள்; அரவிந்தம்-தாமரை.

துணையென்று மாடு, மனை,மக்கள்
சுற்றத் தொகுப்பைநம்பிப்
புணையென்று கற்றோர் புகும்அன்னை
பாதம் புகாதநெஞ்சே!
கணையென்று, நீலக் கடலென்று,
பூவாக் கமலங்களுக்(கு)
இணையென்று சொல்லும்கண் ணாள்பத
மேதுணை என்றென்றுமே. 9

என்றைக்கும் நல்லன வேசொல்லு
வேன்உனக்(கு) என்மனமே!
இன்றைக்கும் சொல்லுகின் றேன்;இனி
யேனும்உன் ஊனம்விட்டுக்
கொன்றைக்கும் திங்கட் கொழுந்தினுக்
கும்சடைக் குன்றைத்தந்த
மன்றத்துக் கூத்தன் மனையாட்டி
பாதம் வணங்குகவே. 10

வணங்கும் குடிகட்கு வாழ்வும்
வளமும் வழங்கும்வள்ளல்;
பிணங்கும் மனத்தையும் ஈர்த்தன்பு
காட்டும் பிராட்டி;பொல்லா
அணங்கும் பிசாசமும் அண்டாமல்
காவல் அருளித்தன்பால்
இணங்கும் அடியார் சுமைகளைத்
தன்தோளில் ஏற்பவளே! 11

மாடு-செல்வம்; புணை-தெப்பம்; கணை-அம்பு; அணங்கு-தீயசக்திகள்.

ஏற்றருள் வாய்தமிழ் மாலையை;
என்இத யாசனத்தே
வீற்றருள் வாய்; விரைந் தேஅருள்
வாய்; பல வேதனையால்
ஆற்றகில் லேன்,அலந் தேன்,அடைந்
தேன்உன் அடைக்கலமாய்—
மாற்றறி யாச்செழும் பொற்பதம்
காட்டி ளர்திருவே! 12

திருவுற் றிலங்கு செழுங்கலை
வாணர்தம் சிந்தனையில்
கருவுற் றெழுந்த பெருந்துறைக்
கோயில்ஓர் காப்பியமோ?
உருவுற்ற காப்பியத்(து) உட்பொரு
ளாய்நிற்கும் உண்மைகளோ
அருவுற்ற கோலத்தில் ஆங்குற்ற
நீயும்எம் அப்பனுமே! 13

அலைவைத்த ஞாலத் தியங்கும்
உயிர்கள் அனைத்தையும் ஓர்
நிலைவைத்துக் காப்பவளே! நெஞ்சில்
வஞ்சம் நிரம்பவைத்தோர்
புலைவைத்த சிந்தை புகாதவ
ளே! வந்து பொன்னடிக்கீழ்
தலைவைத்த தொண்டர் முடிக்கணி
யாகின்ற தாமரையே! 14

அலந்தேன்-வருந்தினேன்

தாமரை பூக்த தடாகங்கள்
சூழ்பெருந் தண்துறைக்கண்
பூமலி வாசக் குருந்தம்
பொழில்வளர் பூங்கொடியே!
மாமக ளுங்கலை வாணியும்
மற்றுள்ள வானவரும்
நாமமும் பாதமும் போற்றிப்
பணிந்திடும் நாயகியே. 15

நாயகி யே,நளி னசனக்
கன்னியும் நாமகளும்
தாயெனப் போற்றித் தலைப்படும்
நின்னிரு தாள்களல்லால்
தேயமும் காலமும் மேனியும்
மாறினும் சிற்றடியேம்
போய்அர ணய்ச்சர ணகத்
தகுந்த புகல்இல்லையே! 16

இல்லாமை பேசி, இயலாமை
யால்வாடி, ஏக்கமுற்று
வெல்லாமை எய்தி, மெலியாமல்
காக்கும்எம் மெய்த்துணையே!
சொல்லாமை, சொல்லித் தொழாமை,உன்
னைத்தொழத் தோத்திரங்கள்
கல்லாமை யாவும் பொறுத்தருள்
வாய்சிவன் காதலியே! 17

காதலர் நெஞ்சின் கனவுகட்(கு)
உள்ளம் கனிந்திரங்கி
ஆதர வாகி அவரைஒன்
றுக்கி அருளும்அன்னாய்!
நீதரும் வாழ்நாள், நிறைசெல்வம்,
மக்கள், நிறைவு,புகழ்,
போதமும் யார்தரு வார்அடி
யேங்கட்குஇப் பூமியிலே! 18

பூதேவி மார்பு சுரக்கின்ற
புத்தம் புதுப்புனலால்
சீதேவி எட்டு வகைக்கோல
மும்பூண்டு தேசம்எங்கும்
பாதார விந்தம் பெயர்த்தாட
நீஆணை பாலிப்பதை
மாதேவி யே,யோக வல்லியே,
எங்ஙனம் வாழ்த்துவமே! 19

வாழ்த்திப் பணிந்து வரம்வேண்டி
உன்னை வலம்வந்தபின்
தாழ்த்தற்(கு) ஒருசக்தி உண்டோ?
சகத்தினில் சாகசத்தால்
காழ்த்துப் புறப்பட்ட சூரர்
குலம்கெல்லிக் கைத்திறத்தால்
வீழ்த்திச் செயம்கொண்ட வேலனை
ஈன்ற விளங்கிழையே! 20

காழ்த்துப் புறப்பட்ட—உறுதியோடு புறப்பட்ட

இழைக்கின்ற பாவங்கள் எண்ணில
வாயினும் இன்னல்உற்றே
அழைக்கின்ற போதுவந்(து) ஆதரித்(து)
எங்கட்(கு) அருள்புரிவாய்!
குழைக்கின்ற சொற்றமிழ் மாலைகொண்(டு)
உள்ளம் குளிர்ந்துநலம்
தழைக்கின்ற வாழ்வு தருகின்ற
அன்பின் தயாபரையே! 21

பரமாக நின் இரு பாதங்கள்
பற்றிப் பணிபவர்க்குக்
கரமான கற்பகத் தாருவால்
தேனுவால் காலமெல்லாம்
வரமாக யாவும் வழங்குகின்
றாய்,சிவன் மார்பினுக்கோர்
உரமாகத் தங்கி ஒருபாகம்
வவ்வி உறைபவளே! 22

உறையும் பதியோ திருவார்
பெருந்துறை; உன்புகழை
அறையும் மறையோ திருவா
சகம்;உன் அருளின்வெள்ளம்
நிறையும் தடமோ அடியார்தம்
நெஞ்சம்; நினையும்அன்பர்
குறையும், பிணியும், பகையும்
அகற்றிடும் கோமளமே! 23

கற்பகத்தாரு–கற்பகமரம்; தேனு–காமதேனு;

கோமள மே!கொன்றை வார்சடை
யாளுெடும் கூடிநின்று
நாமக ளை,திரு வை,பிர
மாதியர் நாரணரைத்
தாமரைப் பாதம் தலைக்கொள்ளும்
வானவர் தானவரைச்
சேமமுற் ருேங்கச் சிறப்பிக்கும்
பேரருட் சித்திரமே! 24

சித்திர மே,சிவ மே,சிவ
ஞான சிதம்பரமே!
தத்துவ மே,தத்து வாதீத
மே,அருட் சாகரமே!
சத்திய மே,தவ மே,தவ
வாணர் தரிசனமே!
நித்திய மே,நிதி யேசர
ணுயினம் நின் கழற்கே! 25

கழலும் சதங்கையும் தண்டையும்
ஆர்ப்பக் கறைமிடற்ருேன்
தழலும் துடியும் சடையும்
கறங்கச்செய் தாண்டவத்தை
நிழலாய்த் தொடர்ந்தாடி நீசமன்
செய்ய நினைந்திலையேல்
சுழலும் உலகங்கள் தூளாகும்
அல்லவோ சுந்தரியே! 26

தானவர்-அசுரர், வித்தியாதரர்; கறைமிடற்ருேன்-நீலகண்டன்;
துடி-உடுக்கை.

தரிக்கின்ற ஆவிக்குத் தாய்நின்
பதம்துணை; தன்மனத்தே
வரிக்கின்ற ஆசைக்கு வள்ளற்
கரம்துணை; வாழ்க்கைமுற்றும்
கரிக்கின்ற போதுன் கடைக்கண்க
ளேதுணை; காலன்வந்து
சிரிக்கின்ற போதுன் திருநாம
மேதுணை சேயிழையே! 27

சேயாகத் தோன்றி, சிரத்தை
அசைத்து, சிறுகைகொட்டி,
வாயார வாழ்த்தி, பரிசாக
முத்து வடத்தைத்தந்து,
நீஆர்வத் தோடு குருபரன
பாட்டுக்கு நேர்மைசெய்த
தாய்ஆவை! அன்னன் தமிழரவை
ஞான சவுந்தரியே! 28

'தரியேன் இனிஆவி சங்கரா!'
என்று தமிழ்மதுரா
புரியோன் அமைச்சன் திருவாத
வூரன் புலம்பல்கண்டு
பரியேறிச் சென்ற பராபரன்
காதற் பசுங்கிள்ளையே!
உரியேன் அல் லேன்என்ற போதிலும்
வேண்டினேன் உன்னருளே! 29

கரித்தல்-உப்புக்கரித்தல், கசத்தல்.

அருளுக் கொருபொரு ளாய்விளங்
குஞ்சச்சி தானந்தமே!
இருளுக் கொருதுணை யாய்உடன்
வந்திடும் ஈச்வரியே!
மருளுக் கொருமருந் தாய்வரும்
தேவ மனோகரியே!
பொருளும் பொருள்தரு சொல்லும்நீ
யே,வண்ணப் பூங்கொடியே! 30

கொடியேறு தேரும் அரசும்
முரசும் கொடாவிடினும்
குடியேற வீடும் நிலமும்
தொழிலும் கொடைபுரிவாய்!
கடியேறு பூவும் கவிவாணர்
பாவும் கருதும் அன்னாய்,
படியேறி வந்து பணிபவன்
நாளும்கண் பார்த்தருளே! 31

பார்க்கக் கிடைப்பவை பாதங்கள்;
வேதங்கள் பாடும்வண்ணம்
வார்க்கச்சு மார்பும், வதனார
விந்த மழைக்கண்களும்
யார்க்குக் கிடைக்குமோ யான்அறி
யேன்;புவி யாவினையும்
ஈர்க்கும் பதங்களை யேவெளிக்
காட்டிய ஏந்திழையே! 32

ஏந்தும் கரங்கட் கிடுதற்குச்
செல்வமும், எண்ணங்களை
மாந்தர்க் குணர்த்தவற் றுக்கவி
யாற்றலும், வான்புகழும்,
சாந்துணை யும்தள ராமனத்
தோடுடல் தந்தருள்வாய்—
சேந்தனைத் தும்பிக்கைச் செல்வனைப்
பெற்ற சிவாம்பிகையே! 33

சிவனுக்கு மேலொரு தெய்வமில்
லை;திரு வாசகமாம்
அவனுக்குச் சாற்றிய நூலுக்கு
மேலும்ஓர் ஆக்கமில்லை!
அவனை அதன்வழி அன்புடன்
போற்றும் அடியவர்க்குப்
புவன முழுதுடை யாள்தரு
வாள்எந்தப் போகமுமே! 34

போகியர் துய்த்துப் புளித்துச்
சலித்துப் புழுத்தலைந்தே
ஏகிய நாட்களுக்(கு) ஏங்கியே
நின்பால் இறைஞ்ச,அன்னார்
மோகமும் சோகமும் முற்றும்
களைந்து முறைப்படுத்தித்
தேகமும் உள்ளமும் வாக்கும்
புதுப்பிப்பாய் தெள்ளமுதே! 35

தெள்ளூற்ற ஞானியர், வேதியர்,
பாவலர், தேவர்ஒன்ருய்
உள்ளூற் றிலங்கும் ஒளியான
உன்னை உருவகித்தே
கள்ளூற்ற வண்ணப் புதுமலர்
தூவிக் கலந்திறைஞ்சும்
புள்ளூற்ற சோலைப் பெருந்துறை
வாழ்வே, புகழ்த்துணையே! 36

புகழுகின் ருர்சிலர்; போற்றுகின்
ருர்சிலர்; போதம்பெற்றுத்
திகழுகின் ருர்சிலர்; தேம்புகின
ருர்சிலர்: தீவினைவேர்
அகழுகின் ருர்சிலர்; அம்பிகை
நின் திரு அம்பலத்தே
நிகழுகின் ருர்பல வாய
நிலைகளில் நின் அன்பரே! 37

அன்புடைத் தெய்வம்; அமரர்
தொழும்தெய்வம்; ஆயுள், கல்வி,
பொன், புகழ், மேனிப் பொலிவு,
புயவலி, போரில்வெற்றி,
நன்மனை, மக்கள், நலம், ஞானம்
அன்ன நவிலரிய
இன்பங்கள் யாவும் தரும்யோக
நாயகி எம்தெய்வமே! 38

புள்-பறவை; அகழ்தல்-தோன்டுதல்.

எம்மனோர் போற்றி இயம்புதற்
கெட்டா இயல்பினவாம்;
மம்மரும் நோயும் வருத்தமும்
தீர்க்கின்ற வான்மருந்தாம்;
செம்மையும், ஆற்றலும், ஞானமும்
சேர்த்தெங்கள் சிந்தையிலே
வெம்மையொன் றில்லாது மேவிய
பாதார விந்தங்களே! 39

விந்தைக் களப முலைமாதர்
சேர்க்கைக்கு வேட்கையுற்றுச்
சிந்தை உழன்றனை அல்லதென்
செய்தனை? தேவிமுன்னே
சந்தத் தமிழ்மாலை சாற்றினை
யா,தலை தாழ்த்தினையா,
வந்தித் தொழுகினையா,இல்லை
யேஎன் மடநெஞ்சமே! 40

நெஞ்சமே கோயில்; நினைவே
வழிபாடு; நேயமுடன்
அஞ்செழுத் தோதி அணிகின்ற
நீறே அருமருந்து;
வஞ்சமொன் றில்லா வழியடி
யார்க்கு மகாசக்தியின்
மஞ்சளே காப்பு; மலர்த்தாள்க
ளேபொருள் வாழ்த்துதற்கே! 41

மம்மர்–மயக்கம்; களபம்-சந்தனம்.

வாழ்கின்ற நாளில் மனம்போன
போக்கில் மயங்கிச்செல்வீர்!
தாழ்கின்ற நாட்களில் தெய்வத்தை
ஏசித் தனித்துநிற்பீர்!
சூழ்கின்ற அன்பர் தொழும்தேவி
பாதம் தொழாதுழன்று
வீழ்கின்ற மானுட ரே,உங்கள்
வாழ்வொரு வேடிக்கையே! 42

கையூட்டுப் பெற்றும், கணக்கிடைப்
பொய்த்தும், களவுசெய்தும்
பையூட்டப் பெற்ற பணமோ
துணை?மறை பாடுகின்ற
நெய்யூட்டப் பெற்ற குழலாள்
பதம்துணை! நீங்களுங்கள்
பொய்யூட்டப் பெற்ற பொருளை நம்
பாதீர்கள் போம்வழிக்கே! 43

வழியொன்றும் இல்லா வறியவர்க்(கு)
ஈதல்; வளமைபெற்றும்
பழியொன்றும் இல்லா நெறிபற்றி
வாழ்தல்; பரவுதற்கு
மொழியொன்றும் இல்லா முதல்வியைப்
போற்றுதல்; மூன்றும்அன்றோ
அழிவொன்றும் இல்லா நிலைவேண்டு
வார்க்குள்ள ஆசைகளே! 44

கையூட்டு-லஞ்சம்.

ஆடிய பாதனை, அந்தணர்
நேயனை, ஐந்தவித்தோர்
தேடிய ஞானச் செழும்பொரு
ளாய்வரும் தேசிகனைக்
கூடிய எங்கள் குலதெய்வ
மே,உன்றன் குங்குமமும்
நாடிய ஈசன் திருநீறும்
யாம்பெற்ற நற்செல்வமே! 45

நன்றாய வேதங்கள் நான்கும்
புகழ்ந்தேத்தும் நாயகியே!
அன்றால நீழல் அமர்ந்தோன்
துணைவியே! ஆர்வலர்க்குக்
குன்றாத வாழ்வும் குறையாத
செல்வமும் கூட்டுவித்துப்
பொன்றாத வானவர் போகமும்
சேர்ப்பிக்கும் பூரணியே! 46

பூரணி யே,புவி ஏழையும்
ஊட்டிப் புரப்பவளே!
தாரணி மார்பினன் சங்கரன்
பங்கில் தழைப்பவளே!
ஓரணி யாய்அடி யார்திரண்
டேத்தும் உமையவளே!
நாரணி, வாணி, மனோன்மணி
யாவும்உன் நாமங்களே! 47

பொன்றாத-அழிவில்லாத.

நாமம்ஓர் ஆயிரம் நாண்மலர்
தூவி நவில்பவர்க்கும்,
நேமம்மா ருத விரதியர்,
யோகியர், ஞானியர்க்கும்-
சேமமும், இன்பமும், சித்தியும்,
முத்தியும் தேர்ந்து நல்கும்
கோமகட் கேசரண் ஆயினுர்க்(கு)
ஏதும் குறைவில்லையே! 48

குறையே நிரம்பிய கோழையை,
ஏழையை, கொள்கைபற்றி
முறையே நடவா முழுமூட
னைத்தமிழ் மூன்றிஞெடும்
மறையே புகழ்யோக வல்லியே
நின்னருள் வாரிதியின்
துறையே புகுவிப்ப தென்றுகொல்
லோஇத் தொழும்பனையே! 49

தொழுதுசொல் வார்துயர் யாவும்
துடைப்பவள்; சோர்வுமிஞ்சி
அழுதுசொல் வார்பிணி யாவும்
களைபவள்; ஆயினும் நீ
பொழுதுசொல் வாய்;மன மே,உட
னேசென்று போற்றல்செய்யாய்!
பழுதுசொல் வார்க்(கு)உற வாகிப்
பதைக்கும்உன் பான்மைஎன்னே! 50

பாரோடும் விண்ணும் பணிகின்ற
தேவிநின் பாதங்களைத்
தேரோடும் வண்ணப் பெருந்துறைக்
கண்வந்து சேவிப்பவர்
சீரோடும், வெற்றிச் சிறப்போடும்,
எல்லாத் திருவும்எய்திப்
பேரோடும் வாழ்ந்து பெறுவர் அன்
றேமுத்திப் பேரின்பமே! 51

பேரா யிரங்கொள் பெருந்துறை
வாணிதன் பெய்கழற்கே
நீரா உருகிய நெஞ்சங்க
ளே, எந்த நேரத்திலும்
நேரா இயங்கவல் லீர்என்னில்
உங்கட்கிந் நீளுலகில்
சாரா வளங்கள் அனைத்தும்
எளிதினில் சார்ந்திடுமே. 52

சாற்றற் கரிய சதுர்வேத
நாயகி; சஞ்சலங்கள்
மாற்றும் மனோன்மணி; வாணி;
இலக்குமி; மண்ணும்விண்ணும்
போற்றித் துதிக்கும் புராதனி;
அன்புடன் பூசிப்பவர்க்கு
ஆற்றல் அருளும் அபிராமி
என்றும் அரண் நமக்கே. 53

அவமே பிறந்த அருவினை
யேன்;புலன் ஐந்தினையும்
தவமே புரிந்துவென் றோர்தமைப்
போல்தமிழ் சாற்றிநிற்பேன்!
சிவமே விளங்கு பெருந்துறை
சார்ந்துன் திருவடிக்காம்
பவமே அருளுகன் டாய்உல
கேழும் படைத்தவளே! 54

பணிசெய்கி லேன்;திருப் பாதம்
தொழேன்;தமிழ்ப் பாடல்சொல்லேன்;
மணிசெய்த கோயில் வலம்செய்கி
லேன்;உன்னை வாழ்த்திநில்லேன்;
பிணிசெய்த கொள்கை பிடித்தலை
வேனை நின் பெய்கழற்கே
அணிசெய்த பாடல்ஓர் ஆயிரம்
செய்ய அருள்செய்கவே! 55

அங்கயற் கண்ணி; அகிலாண்ட
நாயகி; ஐயன்பங்கில்
தங்கிடும் சக்தி; தமிழச்சி;
அச்சம் தவிர்க்கும்தையல்;
சங்கரி;நீலி; சடாமுடி
தாங்கும் தவத்தின்செல்வி;
மங்கலை எங்களின் வாழ்முத
லாகிய மாண்பொருளே. 56

மாலோற் கிளங்கிளை; வைரவி;
  மேரு மலைக்கரசி;
நூலோர் தொழவந்த நுண்கலைத்
  தேவி; நுதல்விழியாள்;
பாலோடு சோறும் கனியும்
  படைப்பினும் பைந்தமிழே
மேலாகக் கொள்ளும் விடையூர்தி
  யாள்எம் விழித்துணையே. 57

துதிக்கின்ற தேவரும் மூவரும்
  மேவரும் தோற்றங்கொண்டு
கதிக்கின்ற கானத் தெருமை
  அவுணனைக் காலில்இட்டு
மிதிக்கின்ற ஆற்றல்நின் ஆற்றலன்
  றோ,எங்கள் வெற்றிச்செல்வி!
மதிக்கின்ற தில்லையம் மாபிற
  தெய்வம்நின் மைந்தர்களே! 58

கள்ளூறு செவ்விதழ் மாதர்தம்
  பால்கொள்ளும் காமத்தையும்,
உள்ளூறி நிற்கும் சினத்தையும்,
  போக்கிஎம் உள்ளத்திலே
தெள்ளூறு ஞானமாம் தீபத்தை
  ஏற்றுவாய்! சித்தமிசை
அள்ளூறும் உண்மை அறிவாய்
  ஒளிர்கின்ற ஆனந்தியே! 59

இளங்கிளை-தங்கை; எருமையவுணன்-மகிடாசுரன்.

ஆனைத்தோல் போர்த்தும் அடற்புலித்
தோலை அரைக்கசைத்தும்
கானத் தெருமைக் கருந்தலை
மேல்நின்ற காரிகையே!
மோனச் செழும்பொரு ளே!குணம்
மூன்றையும் முற்றுவித்த
ஞானச் சுடர்ப்பிழம் பே!அருள்
வாய்எங்கள் நாயகியே! 60

நாடாத கண்ணும், நவிலாத
நாவும், நயந்துநின் தாள்
சூடாத சென்னியும், தூமலர்
தூவித் தொழாதகையும்
ஈடாக வேபெற யான்செய்த
தீமைதான் யாதுசொல்வாய்!
கோடாத நெஞ்சம் கொடுத்தருள்
வாய்என் குலதெய்வமே! 61

வற்றாத பொய்கை வயல்சார்ந்த
நெல்லை வளநகரில்
கற்றார்க் கினிக்கும் கவியாய்ப்
பொலிகின்ற காந்திமதி!
பற்றாக நின் இரு பாதங்கள்
பற்றிப் பணிபவர்க்கு
மற்றார் துணைவேண்டும்? மாறாத
நின்துணை வாய்த்தபின்னே! 62

வாய்வந்த சொல்லி மயங்குகின்
றாய்!இந்த வையகத்தே
நோய்வந்த போதும், பகைவந்த
போதும், நொடிக்குநொடி
போய்வந்த மூச்சுப் புறம்போகும்
போதும்,எப் போதும்உன்னைத்
தாய்வந்து காத்தருள் வாள்மக
னே,ஒரு தாழ்வில்லையே! 63

தாதாடு சோலைக் கிளியென்ப
தோ?தமிழ்ச் சங்கத்திலே
வாதாட வந்த பெருமான்
உகந்த மயிலென்பதோ?
காதாடும் வண்ணக் குழையாட
வாசம் கமழும்கொன்றைப்
போதாட ஆடும்அம் மா,உன்னை
எங்ஙனம் போற்றுவதே! 64

ஏரார்ந்த கண்ணி; இமவான்
குலக்கொடி; எட்டுத்திக்கும்
தோரார்ந்த வெற்றித் திருவாட்டி;
செந்தமிழ் தேறும்செல்வி;
சீரார்ந்த தில்லைச் சிவகாம
சுந்தரி; தென்குமரி
ஊரார்ந்த கன்னிஎன் றேதுவம்
நின்தாள் ஒழிவின்றியே! 65

தாது-தேன், பூந்தாது.

ஒழியா வருத்தங்கள் ஒன்றிரண்
டா,என் உடம்புந்நெஞ்சும்
அழியா வகை அருள் செய்யவல்
லார்உன்னை அன்றிஉண்டா?
விழியால் அமரர் பகைதீர்த்து
வாழ்வித்த வேதவல்லி,
பழியா யின அகன்(று) ஏழையேன்
வாழக்கண் பார்த்திலையே! 66

பால்தந்தாய் ஆங்கொரு பிள்ளைக்குப்
பைந்தமிழ்ப் பாடல்தந்தாய்!
வேல்தந்தாய் மற்றுமோர் பாலற்குப்
போரிலே வெற்றிதந்தாய்!
சேல்தந்த கண்ணுடை யாய்,மது
ராபுரிச் செல்வப்பெண்ணே!
மால்தந்த தன்றிமற் றென்னதந்
தாய்இந்த மைந்தனுக்கே! 67

மையுண்ட கண்ணின் மடமக
ளே!எங்கள் வாழ்வின்வைப்பே!
பொய்யுண்ட நெஞ்சக் குகையில்
புகாத புனமயிலே!
நெய்யுண்ட தூண்டா மணிவிளக்
கே!இங்கு நித்தநித்தம்
நையுண்ட பேதைநின் தாள்அன்றி
வேறெதை நாடுவனே! 68

நையுண்ட-நசுக்கப்பெற்ற.

நான்மறந் தேன்என்ற போதும்
எனைஉன் றன் நல்லநெஞ்சம்
தான்மறந் தால்என் தமிழெங்கு
போகும்? தயைசெய் அம்மா!
ஏன்மறந் தாய்? இந்த ஏழைக்கும்
இன்னருள் என்றுசெய்வாய்?
மான்மறந் தேமனம் ஒன்றிநிற்
பார்தொழும் உத்தமியே! 69

உள்ளக் கமலம் உனக்கே
விரிந்த(து); உணர்வெனும்பொன்
வெள்ளப் புனல்மெல்ல மெல்லநின்
தாட்கே விரைகின்றது;
கள்ளப் புலன்கள் கரைய, என்
தாபம் கழிந்தரவே
அள்ளக் குறையா அமுதே, இந்
நாளில் அருள் புரியே! 70

அடியார் புரிந்த பிழைபொறுப்
பாய், அவர் அல்லலுறக்
கொடியார் வகுத்த இடர்களை
வாய், என்ற கூற்றை நம்பிக்
கடியார் திருப்பதம் கைகுவித்
தேன்; எனைக் காத்தல்செய்வாய்!
பொடியார் கபாலி உடனுறை
கற்பகப் பூங்கொடியே! 71

பூவார் திருப்பதம் போற்றிடும்
தொண்டரும் பொய்யர்கள்போல்
நோவால் வருந்துவ தோ?இதை
யார்பால் நுவலுவதோ?
வாவா அருள்புரி வாய்,சங்க
ரன்கோவில் வாழ்ந்திருக்கும்
மூவா இளமை குதிகொண்ட
மூரல் முகத்தினளே! 72

முற்றுக் குறுநகை யால்பகைக்
கூட்டத்தை முற்றுவிப்பாய்!
நற்றுள் தொழுந்தொண்ட ராயினர்க்
கெல்லா நலனும்செய்வாய்!
கற்றூர் விழைகச்சி ஏகம்ப
வாணனின் காதற்பெண்ணே,
அற்றூரைத் தாங்கும் அம் மா.அடி
யேன்உன் அடைக்கலமே! 73

அலர்கதிர், திங்கள்,செவ் வாய்,புதன்,
தேவர்தம் ஆசிரியன்,
பலர்புகழ் வெள்ளி,சனி,விட
மேகொண்ட பாம்பிரண்டாய்
இலகிடும் கோள்கள் எதிர்த்துநில்
லா;என்றும் இன்னல்செய்யா;
வலமுறக் காக்கும்; மகாசக்தி
மைந்தரை வாழ்விக்குமே! 74

மூரல்–புன்சிரிப்பு: அற்றூர்–வறியோர்; கதிர்-சூரியன்; திங்கள்-சந்திரன்; தேவர்தம் ஆசிரியன்-குரு; வெள்ளி–சுக்கிரன்;பாம்பிரண்டு–இராகு,கேது; கோள்கள்–நவக்கிரகங்கள்.

வாகை சுமந்த வடிவேற்
    குமாரனும், வாய்த்தமிழ்ப்
பாகை விழைந்த விநாயகப்
    பிள்ளையும் பக்கம்வர-
பூ-ஜை சுமந்துநின் பொற்பதம்
    போற்றும்இப் புத்திரற்கும்
நீ-கை கொடுத்தருள் வாய்,சிவன்
    வாமத்தில் நிற்பவளே! 75

பசித்திருப் பார்முகம் பார்த்தறி
    யார்.இந்தப் பாரினிலே
நசித்திருப் பார்துயர் தீர்த்தல்செய்
    யார்;எந்த நாளும்நன்கு
புசித்திருப் பார்;பல போகம்துய்ப்
    பார்;அந்தப் புண்ணியர்கள்
வசித்திருப் பார்என்ற போதும்அம்
    மா இங்கு மாய்ந்தவரே! 76

மானம் குலம்வளம் வாழ்க்கைகெட்
    டாலும், வழங்கிவரும்
தானம் தயைகொடை சற்றும்
    கெடார்;கொள்கை தான்கைவிடார்;
ஈனம் நினைத்தறி யார்;பிறர்
    வாழ இடருழல்வார்;
வானம் புகுந்தபின் னும்அன்
    னார் இங்கு வாழ்பவரே! 77

வாய்க்குச் சுவைமிக்க பண்ணியம்;
    சூட மலர்ச்சரங்கள்;
தேய்க்கப் பசுமஞ்சள்; குங்குமம்
    சந்தனம்; சேலைதுணி;
செய்க்குத் தெரிந்த மழலையிற்
    சிற்சில தீங்கவிதை;
தாய்க்குவே றேது தருவாய்நீ
    ஏழைத் தனிநெஞ்சமே! 78

தள்ளும் கரங்களோ தாயின்
    கரங்கள்? தவறுகண்டால்
கிள்ளித் திருத்தும் கரங்கள்;
    குழந்தையின் தேவல்கண்டால்
அள்ளும் கரங்கள்; அடியேன் என்
    பால்மட்டும் அம்பிகையின்
வள்ளற் கரங்கள் வழங்காத
    தேனே மதுகரமே! 79

மடைவாய்க் குருகு தவம்செய்ய
    மீன் அதன் வாய்க்குத்தப்பி
இடைபாய் புனல்வள நாட்டர
    சே!விருந் தெண்ணிஎண்ணிக்
கடைவாய் ஒழுக்கைத் துடைக்களச்
    சில்துணடு காண்பதற்கும்
முடையாய் முடிந்த கதையாவ
    தோஎன் முயற்சிகளே! 80

பண்ணியம்-தின்பண்டம்; மதுகரம்-தேனீ; குருகு-கொக்கு.

முக்கண் படைத்த முதல்வியும்
    நீ;எந்த மோசடிக்கும்
தக்கதன் டம்செய்து நீதியைக்
    காக்கும் தலைவியும் நீ;
திக்குவே றில்லை தினம்தினம்
    வந்துனைச் சேவிக்கும்என்
துக்கம் தொலைகின்ற நாள்எந்த
    நாள்?இன்று சொல்பதிலே! 81

சொல்லிப் புலம்பிய நன்மைதுன்
    பத்தில் துடிக்கின்றது;
மெல்லச் சுருட்டிய தீமைஇன்
    பத்தில் மிதக்கின்றது;
அல்லை விளக்க வரும்கதி
    ரே,உண்மை அம்பலத்தில்
வெல்லப் பணித்தருள் வாய்;கதி
    நீயன்றி வேறில்லையே! 82

வேறுவே றான பிழைகள்செய்
    வார்;பல வேடங்கொள்வார்;
சோறுகா ணாத எளியோர்
    வயிற்றைச் சுரண்டித்தின்பார்;
தாறுமா றாக்கி உலகைக்
    கெடுப்போர் சதைகிழித்தே
கூறுநூ றாக்க உடனே
    புறப்படு கொற்றவையே! 83

அல்-இருட்டு.

கொற்றக் களிறு, குதிரை,கா
லாள்,தேர், குடை,முரசு,
சுற்றும் கவரி,சிங் காதனம்,
செங்கோல், சுடர்மணிவாள்,
கற்றைக் கதிர்முடி ஆயவை
தோன்றஎன் கண்ணெதிரே
சற்றே எழுந்தருள் வாய்;புவி
ஆளும் தயாபரையே! 84

பண்ணூர் தமிழ்க்கவி பாடிவந்
தேன்;நின் பதங்களன்றி
மண்ணாள் அரசை மதித்தும்
இரேன்;நெஞ்சில் வஞ்சமில்லேன்;
நண்ணு இடர்வந்து நண்ணவும்
நீதான் நயந்திலையேல்
கண்ணூர் பெருந்துறைத் தாயே,
எவர்என்னைக் காப்பவரே! 85

காலமும் நீயே கதியென்ற
நல்லோர் கலங்குவதோ?
சீலமும் அன்பும் செறிந்தவர்
எண்ணம் சிதறுவதோ?
ஓலமும் காதில் விழவில்லை
யோ?சிவன் உண்டபொல்லா
ஆலமும் நல்லமு தாய்மாறச்
செய்தஎன் அம்பிகையே! 86

ஆலம்-நஞ்சு.

அற்றூர் சரண்புகும் ஆதா
வே!செல்வம் அத்தனையும்
பெற்றூர் விரித்த வலையுள்
விழாத பெடையன்னமே!
கற்றூர் அகந்தைக் கரங்கள்
தொடாத கலைமதியே!
வற்றூ அருட்கட லே,உன்னை
எங்ஙனம் வாழ்த்துவதே! 87

தேவியின் மைந்தர்க்குத் தீமை
நினைப்பவர் சேமிப்புக்கள்
பாவியர் வாய்ப்படும்; பாழாகும்;
நீருகும்; பண்பின்மிக்கார்
பூவன்ன நெஞ்சங்கள் புண்ணுகத்
தீமை புரிபவர்க்கோ
சாவும் வரும்;குலம் தானழி
யும்; இது சத்தியமே! 88

சத்தியம் சொல்லுகின் றேன்;சக்தி
தாசர், சதுர்மறையோர்,
பத்தினிப் பெண்டிர்,பயன்கரு
தாது பணிசெய்தொண்டர்,
உத்தம ஞானியர் உள்ளம்
கலங்கஓர் ஊறுசெய்தோர்
எத்தனை செல்வம் இருந்தென்ன
யாவும் இழந்தவரே! 89

இழந்தவை மீட்டுத் தரும்;எந்த
நன்மையும் எய்துவிக்கும்;
உழந்தவர் தீவினை நோய்பகை
போக்கும்; உயர்வுநல்கும்;
தொழுந்தகை சேர்க்கும்; பெருந்துறை
நாயகன் தோள்தழுவிக்
கொழுந்தெனத் தேவி குடிகொண்
டிருக்கும் குருந்தடியே. 90

குன்றில் பிறந்த குளிர்தென்ற
லே!மக்கள் கூடியுள்ள
மன்றில் பிறந்த வளர்கலை
யே!பிணை மானின்கன்றே!
ஒன்றில் பிறந்து பலவாய்
விரிந்த உயிர்ப்பொருளே!
என்றும் பிறந்திற வாதவ
ளே!அன்பை ஏற்றருளே! 91

நாடும் கவிதை கலைஞானம்
யாவுக்கும் நாயகியே!
ஏடும் படிக மணிமாலை
யும்கொண்ட ஏந்திழையே!
ஈடும் எடுப்பும் இலாவகை
என்நாவில் என்றும்நின்று
பாடும் தமிழ்க்குயி லே!அருள்
பாலிப்பாய் பாரதியே! 92

உழந்தவர்—தவிந்தவர்.

பாரா முகமாய் இருப்பது
வோ? நான் பரிந்துசெய்யும்
ஆரா தனையில் உவப்பில்லை
யோ? என்பால் அன்பில்லையோ?
தீரா இடும்பைகள் தீர்க்கும்என்
கண்கண்ட தெய்வமன்றோ?
காரார் நறுங்குழல் மானே,
மயிலாப்பூர்க் கற்பகமே! 93

கல்வியும் பாடும் கவிதைக
ளும்நின் கழல்களுக்கே;
செல்வமும் சேரும் சிறப்பனைத்
தும்நின் திருவடிக்கே;
பல்வகை ஞானம், பணிகள்,
பயன்கள் பதங்களுக்கே;
நெல்வளர் நாடுடை யாய், இனி
யாது நிகழ்த்துவதே! 94

நின்பால் படைக்கின்ற நித்திலச்
செந்தமிழ் நீதந்தது;
அன்பால் உனைப்போற்றும் ஆர்வமும்
நீயே அருளியது;
தன்பால் அணைவோரைத் தாங்கும்அம்
மா, ஓர் தவமும்இல்லா
என்பால்நீ வைத்த கருணையை
என்னென் றியம்புவதே! 95

இருக்காதி நான்மறை போற்றும்
பதம்;தினம் ஏத்துபவர்
செருக்காதி தீவினை நீக்கும்
பதம்;கூற்றம் சீறிவந்தே
நெருக்காது முன்வந்து நிற்கும்
பதம்;விழி நீரரும்ப
உருக்காண வந்தென்னை ஆட்கொண்ட
தேவி உயர்பதமே! 96

உறக்கம் கலைய உயிர்ப்புள்
விழித்த(து); உவந்துவிண்ணில்
பறக்கும் சிறகு முளைத்ததென்
நோன்பு பலன்தந்தது;
திறக்கும் கபாடங்கள் தாள்நீங்கச்
செந்தேன் செழிக்கின்றது;
துறக்கம் கிடைத்தது தேவாதி
தேவி துணைப்பதத்தே. 97

பணிகொண்டு பைந்தமிழ்ப் பாடல்கொண்
டென்னுட் பயின்றுகொண்டே
அணிகொண்ட கோலம் அருள்கொண்டு
காட்டிய ஆதிசக்தி!
தணிகொண்டென் ஐந்து புலன்கள்பே
ரின்பம் தழுவவந்த
மணிகொண்ட நின்பதம் வாழிய
வாழிய வாகைகொண்டே! 98

இருக்கு-ரிக்வேதம்

வாழிஎன் தேவி மலர்ப்பாத
பங்கயம் வாழியவே!
வாழிஎன் தேவி மகிழும்
பிரான்கழல் வாழியவே!
வாழிஎன் தேவி வதியும்
பெருந்துறை வாழியவே!
வாழிஎன்தேவி திருத்தொண்டர்
நீடுழி வாழியவே! 99

வாவிக் கமல வயல்சூழ்
பெருந்துறை மண்டபத்தே
பாவிச் சிறுமதி யேன்என்ற
போதிலும் பைந்தமிழால்
சேவித் தெழுந்தஎன் சித்தமும்
வாக்கும் செயலனைத்தும்
தேவிக் கினிய நிவேதன
மாகித் திகழ்கின்றவே! 100

நூற்பயன்

தொந்தார் உடல்நலம் எய்திடு
வார்;வெற்றி நூறுகொள்வார்;
சிந்தா குலங்கள் தவிர்ந்துமெய்ஞ்
ஞானம் சிறந்துநிற்பார்;
செந்தா மரைப்பதம் தந்தஎன்
தேவி திருவருளால்
அந்தாதி நன்னூல் அறிந்தார்பே
ரின்பம் அடைந்தவரே.

இவர்...



கவிஞர் கு. சே. இராமசாமி பிறந்தது திருப்பெருந்துறை. பயின்றது காரைக்குடி பணிபுரிவது சிவகங்கை. இவரோடு உடன்பிறந்தவை அருள் நலம் கனியக் கவிதை புனையும் ஆற்றலும், இனிய பண்பும்.

மிக இளமைக்காலம் தொட்டே கவிதையன்னையின் அரவணைப்பில வளர்ந்த இவரது ஆற்றலைச் செவிலித்தாயாய் இருந்து மேம்படுத்தியவர் டாக்டர் வ. சுப. மாணிக்கனார்.

காட்சிக்கு எளியரான இவர் கவியரங்கம் பல கண்டவர். கற்றறிந்த பெருமக்கள் இவர் கவிதையில் காமுற்றுப் போற்றியுள்ளனர். சிவகங்கை மன்னர் **அருட்கவி** என்ற சிறப்பு விருதளித்து நவராத்திரி விழாவில் இவரைப் பாராட்டினர்.

இவருடைய நெஞ்சிலிருந்து ஊற்றெடுத்த புனித வெள்ளத்தில் நீர்த்தேக்கங்களாகி நிற்பன **மொழியாறு, உன்னைச்சரணடைந்தேன், வெள்ளோட்டம், சபரிதரிசனம், பூபாளம்** முதலிய அச்சேறி வெளிவந்த நூல்கள்.

'உன்னைச்சரணடைந்தேன்' நூலில் தன்னைப் பறிகொடுத்த தமிழ் வளர்க்கும் சேதுபதி மன்னர் சேதுசமஸ்தானத்தின் சார்பில் மீண்டும் அதனைப் பதிப்பித்து வழங்கினர். நூலை வெளியிட்டு வாழ்த்திப் பேசிய திருமுருக கிருபானந்த வாரியாரிடம் அப்போது இவர் பெற்ற சிறப்புப் பெயர்: **அருணகிரியின் பேரன்.**

— வே. திருவரங்கராசன் பி. ஏ.,